**<u>மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>**

**எம்.சி.ஓ.பி.எண். 529/18** **நாள். 23.11.2023**

2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கன்னியப்பன் | தொழில் | |
| த.பெ/க.பெ. | சுப்புராயன் | சாதி | |
| கிராமம் | கவரை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 50 |

**<u>ம.சா.1</u>**
**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்திற்கு முன்பு அப்பம்பட்டில் மெக்கானிக் வேலை செய்துவந்தேன். 24.04.2018 இரவு 7.30 மணிக்கு அப்பம்பட்டில் இருந்து கவரை செல்லும்போது விபத்து நடந்தது. இருசக்கர வாகனம் என் மீது மோதிவிட்டது. நான் சைக்கிளில் சென்றேன் பின்னாள் வந்த இருசக்கர மோட்டார் வாகனம் என்மீது மோதிவிட்டது. என்மீது மோதிய வாகனத்தின் ஓட்டுனர் யார் என்று எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் எத்தனை பேர் வந்தார்கள் என்று தெரியாது. விபத்தில் எனக்கு தலையில் காயம் எற்பட்டது. இரண்டு பல் விழுந்துவிட்டது. காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. முதலில் செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் பின்னர் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். 27 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். எனக்கு கீழ்வரிசையில் பற்கள் விழுந்துவிட்டது. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் தற்போது எனக்கு

சரியாகிவிட்டது என்றால் சரியல்ல. நஷ்டஈடு அதிகம் பெறுவதற்காக என்னுடைய நிருபணம் வாக்குமூலம் பாரா 11ல் உள்ள விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக எனது மகன் கணேஷ்குமார் புகார் கொடுத்தார். என் மகன் வந்து புகார் கொடுத்ததால் 28 நாட்கள் காலதாமதமாகிவிட்டது. என் மகன் மணப்பாக்கம் நெமிலியில் குடியிருக்கிறார். என் மகன் விபத்தை நேரில் பார்க்கவில்லை. மணிகண்டன் த/பெ முனுசாமி என்பவர் தான் வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை எற்படுத்தியவர் என்றாலும், மேற்படி வாகனத்தின் பின்னால் மணிவண்ணன் த/பெ பெருமாள் என்பவர் உட்கார்ந்துவந்தார் என்றாலும் அவருக்கும் விபத்தில் காயம் எற்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி வாகனத்தை ஓட்டிய மணிகண்டனுக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதாலும், அவரின் வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்பதாலும், அவர் ஓட்டி வந்த வாகனத்திற்கு பதிவு எண் இல்லை என்பதாலும், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் மேற்படி மணிவண்ணன் ஓட்டிவந்து விபத்து ஏறபடுத்தியதாக 28 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. அதனால் தான் புகார் 28 நாட்கள் காலதாமதமாகிவிட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கும் சம்மந்தமில்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. எனக்கு நஷடஈடு தரவேண்டியிருந்தால் அதை 1ம் எதிர்மனுதாரர்தான் தரவேண்டும் என்றாலும் சரியல்ல.